

விருதுநகர் தெற்கு மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம் அவைத் தலைவர் செல்வமணி தலைமையில் நடைபெற்றது. இதில் தெற்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் – அருப்புக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் தி.மு.க. கட்சியின் மறுசீரமைப்பு ஆய்வு கூட்டம் பற்றி பேசினார். இக்கூட்டத்தில் மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் இன்பா ரகு, தென்காசி சட்டமன்ற உறுப்பினர் கலை கதிரவன், முன்னாள் எம்.பி.தனுஷ்குமார், முன்னாள் எம்.எல்.ஏ., விஜயகுமார், தங்கப்பாண்டியன், வி.பி. ராஜன், அருப்புக்கோட்டை சேர்மன் சுப்புராஜ், சிவப்பிரகாசம், நெசவாளர் அணி பழனிச்சாமி, நகரச் செயலாளர்கள் ஏ.கே.மணி, எஸ்.ஆர். எஸ்.தனபாலன், முருகேசன், இராஜபாளையம் இராஜ அருள்மொழி, மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் கே.ஜி. ராஜகுரு, தெற்கு மாவட்ட தி.மு.க. துணைச் செயலாளர் ஆர்.வி.கே.துரை, மாவட்ட செயற்குழு உறுப்பினர் சாகுல் ஹமீது, மாவட்ட பொருளாளர் கே.வி.கே.பிராபகரன், இளைஞர் அணி கிருஷ்ணகுமார், ஒன்றிய செயலாளர்கள் மல்லி ஆறுமுகம் ஆகியோர் இருந்தனர்.



விருதுநகர் வடக்கு மாவட்டச் செயற்குழுக் கூட்டம் , மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர கழக செயலாளர், மாநகர மேயர், ஒன்றிய, நகர, பகுதி மற்றும் பேரூர்க் கழகச் செயலாளர்கள், நகராட்சித் தலைவர் மற்றும் அணிகளின் அமைப்பாளர்கள் ஆகியோரின் பங்கேற்புடன் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் வடக்கு மாவட்ட செயலாளர் தங்கம் தென்னரசு கலந்து கொண்டு, கழக மறுசீரமைப்புப் பணிகள் குறித்து கழக நிர்வாகிகளுடன் கலந்துரையாடினார் . இக்கூட்டத்தில், விருதுநகர் மாவட்டத்திற்குரிய தலைமைக் கழகப் பிரதிநிதிகளான கலை கதிரவன் எம்.எல்.ஏ. மற்றும் இன்பா ரகு ஆகியோர் பங்கேற்று சிறப்புரை ஆற்றினர்.

மூத்த பேராசிரியர்களை

இடைக்கால துணைவேந்தர்களாக நியமிக்கக் கூடாது!

த.வெ.க. அரசுக்கு கல்வியாளர்கள் கடும் எதிர்ப்பு!

சென்னை, அக். 13- தமிழக அரசின் 10 மாநிலப் பல்கலைக்கழகங்களில் மூத்த பேராசிரியர்களை இடைக்காலத் துணைவேந்தர்களாக நியமிக்கும் நடவடிக்கை, கல்வியாளர்களிடையே எதிர்ப்புகள் எழுந்துள்ளன. இந்த ஏற்பாடு பயனற்றதாக அமையக்கூடும் என்றும், உள் மோதல்களைத் தூண்டக்கூடும் என்றும், அதன் சட்டப் பூர்வ செல்லுபடியாகும் தன்மை குறித்துக் கேள்விகளை எழுப்பக்கூடும் என்றும் அவர்கள் எச்சரிக்கின்றனர்.

துணை வேந்தர் பதவிகளில் நீடித்து வரும் காலிப் பணியிடங்களை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கையை உயர்கல்வி அமைச்சர் பி. விஸ்வநாதன் சமீபத்தில் அறிவித்தார். இருப்பினும், தலைமைத்துவம் மற்றும் மேலாண்மைத் திறன்கள் தேவைப்படும் அந்த உயர் நிர்வாகப் பதவிக்கு, பணி மூப்பு மட்டுமே தகுதியைத் தீர்மானிக்க முடியாது என்று கல்வியாளர்கள் வாதிடுகின்றனர்.

புகழ்பெற்ற கல்வியாளர் எஸ்.பி. தியாகராஜன் இந்த ஏற்பாட்டை விவேகமற்றது என்று குறிப்பிட்டதோடு, மூத்த பேராசிரியராக இருப்பது மட்டுமே ஒருவரைப் பல்கலைக்கழகத்திற்குத் தலைமை தாங்கத் தகுதியானவராக்கிவிடாது என்றும் கூறினார்.

"வழக்கமாக, ஒரு தேர்வுக் குழு நூற்றுக் கணக்கான விண்ணப்பங்களிலிருந்து சிறந்த மூன்று வேட்பாளர்களைத் தேர்வு செய்கிறது. அவர்களிடம் நேர்காணல் நடத்தப்பட்டு, ஆளுநரால் இறுதி நியமனம் செய்யப்படுகிறது. அதற்குப் பதிலாக, மிகவும் மூத்த பேராசிரியர் நியமிக்கப்பட்டால், அது பல்கலைக்கழகத்திற்குள் பிளவுகளை ஏற்படுத்தக் கூடும்," என்று அவர் கூறினார்.

மற்ற மூத்த பேராசிரியர்களும் இந்த நியமனங்களை நீதி மன்றத்தில் எதிர்த்து வழக்குத் தொடரக்கூடும் என்றும் தியாகராஜன் எச்சரித்தார். துணைவேந்தர் நியமனங்கள் தொடர்பான முட்டுக்கட்டையைத் தீர்க்க, இடைக்கால ஏற்பாட்டைத் தேர்ந்தெடுப்பதற்குப் பதிலாக, மாநில அரசும் ஆளுநரும் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்றும் அவர் பரிந்துரைத்தார்.

சென்னை பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் பி. துரைசாமி, இந்த நியமனங்கள் நீண்டகாலப் பிரச்சினைக்கு ஒரு தற்காலிகத் தீர்வை மட்டுமே வழங்கும் என்று கூறினார். "துணைவேந்தர் இல்லாத நிலையில், குறைந்த பட்சம் மூன்று உறுப்பினர்களைக் கொண்ட ஒரு ஒருங்கிணைப்பாளர் குழு பல்கலைக்கழகத்தை வழி நடத்தலாம். பொறுப்புத் துணைவேந்தராலும் கூட, அந்த நிறுவனத்திற்காக முக்கிய முடிவுகளை எடுக்க வாய்ப்பில்லை. எனவே, இது எந்தவொரு முக்கிய மாற்றத்தையும் கொண்டு வராது," என்று அவர் கூறினார்.

சென்னை பல்கலைக் கழகம் மற்றும் மதுரை காமராஜ் பல்கலைக்கழகத்தை நிர்வகிக்கும் சட்டங்களில் இடைக்காலத் துணைவேந்தர்களுக்கான ஏற்பாடுகள் வெளிப்படையாகக் குறிப்பிடப்படவில்லை என்பதைச் சுட்டிக்காட்டி, கல்வியாளர்களும் இந்த நடவடிக்கையின் சட்டப்பூர்வ செல்லுபடியாகும் தன்மையைக் கேள்விக்குள்ளாக்கியுள்ளனர்.

தனது அதிகார வரம்பிற்குட்பட்ட 13 பல்கலைக்கழகங்களில் 10 பல்கலைக்கழகங்களின் மூத்த பேராசிரியர்களின் விவரங்களை இத்துறை சேகரித்துள்ளது. அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகத்தில் ஏற்கனவே ஒரு துணைவேந்தர் உள்ளார், அதேசமயம் மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம் மற்றும் அழகப்பா பல்கலைக்கழகத்தில் இடைக்காலத் துணைவேந்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

தென்காசி மாவட்டம் கடையநல்லூரில்

பாம்பு கடித்து உயிரிழந்தவரின் குடும்பத்திற்கு நிதி உதவி வழங்க வேண்டும்!

கடையநல்லூர் தி.மு.இராசேந்திரன் எம்.எல்.ஏ. மாவட்ட ஆட்சியருக்கு கோரிக்கை!

தென்காசி.அக்.13- தென்காசி மாவட்டம் கடையநல்லூரில் பாம்பு கடித்து உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கு அரசு நிவாரண உதவி வழங்க வேண்டும்.என கடையநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் தி.மு. இராசேந்திரன் மாவட்ட ஆட்சியர் ரஞ்சித் சிங்கிற்கு கோரிக்கை மனு அனுப்பி உள்ளார்.

அதில் அவர் கூறியிருப்பதாவது.

கடையநல்லூர் முத்து



கிருஷ்ணாபுரம் பருத்தி விளை பகுதியைச்சேர்ந்த சிறு வணிகரான சுடர்மணி (வயது 66) அவர்கள், கடையநல்லூர் அரசு பொது மருத்துவமனையில் பாம்பு கடித்து பாதிக்கப்பட்டு அதிகாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். அதிகாலை வேளையில் மருத்துவர் இல்லாத நிலையில் போதிய சிகிச்சை விரைவாக கிடைக்கப் பெறவில்லை.அதன் காரணமாகத்தான் உயிர் இழப்பு நேர்ந்ததாகவும் இறந்தவரின் உறவினர்கள் பொது மக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

மருத்துவ உதவி உரிய நேரத்தில் கிடைக்கப் பெறாததன் காரணமாக உயிரிழப்பு நேர்ந்திருப்பின் அதற்கு காரணமானவர்கள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்குமாறும்,

இறந்த சிறு வணிகர் சுடர்மணி அவர்களின் குடும்பத்திற்கு தமிழ்நாடு அரசு நிவாரண நிதி வழங்க வேண்டும்.

இவ்வாறு அவர் மனுவில் கூறியுள்ளார்.

எல்நினோ



அறிவு பார்த்து
அம்சம் பார்த்து
தகுதி பார்த்து
தராதரம் பார்த்து
சத்தியம்
தருமம் பார்த்து
சாதிக்கும்
திறன் பார்த்து

கார்மேகமாய்
திரண்டு
கடமை மழை
பொழியும்
ஜன சக்தி

சீரழிக்கும்
சினிமாவை மட்டும் பார்த்து

நிழலை நிஜமென நம்பும்
காலத்தில்தான்

அரசியலில்
அபாயங்கள்
அரியணை ஏறுவதுண்டு...
அப்படி
புறநானூற்று
பூகோளத்தை

ஆக்கிரமித்துள்ள
எல் நினோ
சீரழிவு தான்

இன்றைய
கோட்டுமாடல்
சர்க்கார் என்பதே...

இது
மிகக் கொடுமையானதாக
இருக்கப்
போகிறது...

மின் கட்டணம்

பால் விலை

அரிசி விலை

சந்தி சிரிக்கும்
சட்டம் – ஒழுங்கு
வறட்சி வறுமை

என்னும்

அச்சுறுத்தும்
இந்த தொடக்கம்
முடியும் போது

விசிலடித்த
விரல்களை தங்களுக்குத்
தாங்களே
கடித்துத் துப்பும்
காலத்தை
அது
உருவாக்கியே
தீரும்....



மருது அழகுராஜ்
கழகச் செய்தித் தொடர்புக் குழு துணைத் தலைவர்

பட்டிக்காடும் பட்டணமும்



பட்டிக்காடு : ஏன் தம்பி; பிரதமரும் முதலமைச்சரும் கலந்துகொண்ட அரசு விழாவில், எந்தவித பொறுப்பிலும் இல்லாத பா.ஜ.க. மாநிலத் தலைவர் எப்படி மேடையில் இருக்கலாம்ன்னு த.வெ.க. அமைச்சர் ஒருத்தர் பேட்டி கொடுத்திருக்கிறாரே!

பட்டணம் : **ஆமாமய்யா; அதுவும் தப்புதான்; சுதந்திர தின விழாவில் எந்தவித பொறுப்பிலும் இல்லாத திரைப்பட நடிகையை முன்வரிசையிலே உட்கார வைத்ததும் தப்புதான். அதை அந்த அமைச்சர்கிட்ட யாராவது சொல்லி இருக்கணும்.**